## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 54/2017 | Date :12.08.2022 | PW1 |
|---|---|---|
| Name: சதீஷ் | S/o. பழனிசாமி | |
| Evidence Recorded Time: 03.01 P.M. to 03.10 P.M. | | |

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தற்போது ஐடி பிரிவில் உள்ள டிஜிட்டல் மார்கெட்டிங் சம்மந்தமான படிப்பை ஆன்லைன் வழியாக படித்து வருகிறேன். விபத்திற்கு பின்னிட்டு நான் பெருந்துறையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் சூப்பரவைசராக வேலை பார்த்து வந்தேன். விபத்து சமயத்தில் கரூர் செட்டிநாடு கல்லூரியில் பி.ஈ இறுதி ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். விபத்து 02.04.2015–ம் தேதி காலையில் விபத்து நடைபெற்றது. புதிதாக பைக் வாங்கி இருந்ததால் ஒரு ரவுண்ட் சென்ற வரலாம் என்று அமராவதி ஆற்றுப்பக்கம் சென்றோம். வண்டியை அசார் என்பவர் ஓட்டி சென்றார். அவர் 1–ம் எதிர்மனுதாரர் ஆவார். 2–ம் எதிர்மனுதாரரான அசார் அப்பாவிற்குதான் இருசக்கர வாகனம் சொந்தமானது ஆகும். வேகமாக பைக்கில் சென்றதால் கண்ட்ரோல் இழந்து விபத்து ஏற்பட்டது. விபத்து சமயம் என் நண்பர்தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார், நான் பின்னால் அமர்ந்து சென்றேன். இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்திற்கான விபத்து பதிவேட்டு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து முன்னால் சென்ற வாகனம் ஆனது திடீரென பிரேக் போட்டதால் நாங்கள் அந்த வாகனத்தில் இடித்துவிட்டோம் என்றாலும், அந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் எதுவும் இல்லாததால் நஷ்டஈடு பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்காக நடைபெற்ற அறுவைசிகிச்சைக்கு மருத்துவ பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த மருத்துவபில்களை பொறுத்து நான் ஏற்கனவே கிளைம் செய்ததால் அதனை தாக்கல் செய்யவில்லை. நாங்களே வேகமாக சென்று மோதியதால் 3–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமாக டாடா ஏசி வாகனத்தின் உரிமையாளர் மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனத்தை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கோரிய இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 3–ம்

எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.